"இனிமையான குழந்தைகளே ! நீங்கள் முயற்சி செய்து ஏர்கண்டிஷன் டிக்கெட் வாங்க வேண்டும், ஏர்கண்டிஷன் டிக்கெட் வாங்குவது என்றால் மாயையின் சூடான காற்று அல்லது சண்டையிலிருந்து பாதுகாப்பாக இருப்பதாகும்"

கேள்வி: குழந்தைகளாகிய உங்களுக்கு மகாவினாசத்தின் துக்கம் ஏற்படுமா? ஏற்படாதா? இதனுடைய பாவம் யாருக்கு ஏற்படுகிறது?

பதில்: உங்களுக்கு இந்த மகாவினாசத்தின் துக்கம் ஏற்பட முடியாது, ஏனென்றால் நீங்கள் ஃபரிஸ்தா ஆகின்றீர்கள் அல்லவா? இப்போது அனைத்து ஆத்மாக்களும் கொசுக்கூட்டம் போல் வீட்டிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும், என்ற ஞானம் உங்களுக்கு இருக்கிறது. உங்களுக்கு யாருடைய மரணத்திலும் துக்கம் ஏற்படுவதில்லை, ஏனென்றால் நீங்கள் சாட்சியாக இருந்து பார்க்கின்றீர்கள், ஆத்மா எப்போதும் அமரத்துவம் வாய்ந்தது என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். இந்த வினாசத்தின் பாவம் யார் மீதும் ஏற்படுவதில்லை, இது சண்டையின் யக்ஞம் உருவாக்கி யிருப்பது போன்றதாகும். அனைவரும் சண்டையிட்டு இறந்துத் வீட்டிற்குத் திரும்பிச் செல்வார்கள். இது கூட நாடகத்தின் விதியாகும்.

பாடல்: கூட்டத்தில் எழுந்த விளக்கு ......................

ஓம் சாந்தி. குழந்தைகள் பாட்டின் ஒரு வரியைக் கேட்டீர்கள். இது யாருடைய கூட்டம் (சபை)? ஞானக் கடலானவருடையது. இதைத் தான் பிறகு இந்திரனின் சபை, என்று மக்கள் கூறுகிறார்கள் -- இந்திர சபை. இந்திரன் மழையைப் பொழிவிக்கிறார், என்று மனிதர்கள் நினைக் கின்றனர். குழந்தைகள் புரிந்து கொள் கிறார்கள், இது ஞானக்கடல் பரமபிதா பரமாத்மாவின் சபை, இதில் விட்டில் பூச்சிகள் அமர்ந்திருக்கின்றன, வாழ்ந்து கொண்டே இவருடையவர்களாக ஆவதற்கு அதாவது இந்த உலகத்திலிருந்து இறந்து போவதற்காக. ஏனென்றால் ஜீவ ஆத்மாக்களுக்கு இந்த பழைய உலகம் பிடிக்கவில்லை. இந்த பழைய உலகத்தில் அனைவரும் ஒருவர் மற்றவரோடு சண்டையிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். நான் சொர்க்கத்தை ஸ்தாபனை செய்கின்றேன், என்று பாபா கூறுகின்றார். ஆக குழந்தைகளிலும் கூட வரிசைக்கிரமம் இருக்கின்றனர். சிலர் புக்ராஜ் பரியாகவும், (புஷ்பராகம்) சிலர் நீலம்பரி (நீலமணி) தேவதையாகவும் இருக்கிறார்கள். நிறைய பெயர்கள் இருக்கின்றன. இது ஒப்பிடப்பட்டிருக்கிறது. சில குழந்தைகள் நல்ல புத்திசாலிகளாக ஆகி மற்றவர்களின் சேவையில் ஈடுபடு கிறார்கள். சேவையில் கூட யார் ஈடுபாட்டோடு இருப்பார் கள்? யார் விளக்கிற்கு முழுமையாக பலியாகி இருக்கிறார் களோ அவர்கள். இது மிகப்பெரிய கூட்டமாகும். பாபா ஆத்மாக்களின் கூட்டத்தில் வந்திருக்கிறார், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர் கள். ஆனால் யார் இவரை நல்ல முறையில் தெரிந்திருக்கிறார்களோ, அவர்கள் இவருக்கு முன்னால் நடைமுறையில் இருக்கிறார்கள். இந்த சமயத்தில் கோடியில் சிலர் தான் தெரிந்துள் ளார்கள். யார் பலியாகி விடுகிறார்களோ, பாபாவினுடையவர்களாக ஆகிவிடுகிறார்களோ, அந்த விட்டில் பூச்சிகள் தான் தெரிந்து கொள்வார்கள்.

பாபா, நான் உங்களுடையவன், இது தான் வாழ்ந்து கொண்டே இறப்பது என்பது

புரியவைக்கப் பட்டிருக்கிறது. முதலில் நாங்கள் உங்களிடத்தில் அசரீரியாக இருக்கின்றோம். பிறகு இங்கே வந்து சரீரம் எடுக்கிறோம். குழந்தைகளுக்கு என்னவெல்லாம் ஞானம் கிடைக்கிறதோ, அதை வேறு யாரும் கொடுக்க முடியாது, ஏனென்றால் பாபாவைத் தெரிந்திருக்கவில்லை. குழந்தைகளாகிய உங்களுக்கு பரமபிதா பரமாத்மா வந்து கற்பிக்கின்றார். அனைத்து வேத-சாஸ்திரங்களும் கீதையின் இலைகள், என்று பாடப்பட்டிருக்கிறது. மனிதர்கள் அனைவரும் இந்த மேடையில் எதனுடைய இலைகள்? இந்த தேவி-தேவதா தர்மத்திலிருந்து தான் அனைத்தும் வருகின்றது. ஆகையினால் நீங்கள் கல்பவிருட்ச மரத்தின் படத்தில் ஆரம்பத்தில் பார்த்திருப்பீர்கள் இலைகளே இல்லை. இலைகள் பின்னால் தான் வருகின்றன. ஆகவே அவர்களை மேலே காட்டப்பட்டிருக் கிறது. அஸ்திவாரம் (தண்டு) தேவி-தேவதா தர்மமாகும். முதலில் தண்டு ஒன்று இருக்கிறது, பிறகு அதிலிருந்து கிளைகள் வருகிறது, பிறகு இலைகள் வருகின்றன. இது விராட மனித சிருஷ்டியின் தர்மங்களின் மரம், என்பது குழந்தைகளின் புத்தியில் இருக்கிறது. இன்றைக்கு இருக்கும் அரசாங்கம் தர்மத்தை ஏற்றுக் கொள்வதில்லை. நாங்கள் அனைவரும் ஒன்றாக இருக்க முடியும் என்று கூறுகிறார்கள். ஆனால் தங்களுக்குள் எவ்வளவு சச்சரவுகள் இருக்கிறது. அவர்களுக்குள் சண்டை நடந்து கொண்டே தான் இருக்கிறது. சண்டையின் யக்ஞம் படைக்கப்பட்டிருப்பது போல் இருக்கிறது. எங்கேயாவது சண்டையிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இது கூட நாடகத்தில் அடங்கியுள்ளது. தங்களுக்குள் சண்டையிட்டு இறக்க வேண்டும், இதற்கான யுக்தி வகுக்கிறார்கள். முன்னால் இந்துஸ் தானும்-பாகிஸ்தானும் தனித்தனியாக இருந்ததா என்ன? அனைவரும் ஒன்றாக இருந்தார்கள். அரசாங்கமும் உறுதியாக இருந்தது. யாரும் தங்களுக்குள் சண்டையிட முடியாது, ஏனென்றால் மேலே பெரிய-பெரிய நவாபுகள் இருந்தார்கள். இப்போது முழு உலகத்திற்கும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற பெரிய-பெரிய கமிட்டிகள் இருப்பது போல் ஆகும். ஆனால் இவை அனைத்திற்கும் எஜமானர்கள் (கேள்வி கேட்பவர்கள்) யாரும் இல்லை. இரண்டு துண்டுகளாக ஆகிவிட்டனர். துக்கம் அதிகரித்துக் கொண்டே தான் இருக்கிறது. ஒருவர்-மற்றவரை அடித்துக் கொண்டே தான் இருக்கிறார்கள். எப்படியொரு ரகசியம் நாடகத்தில் இருக்கிறது, என்று பாருங்கள். ஒருவர் மற்றவரிடத்தில் சண்டியிட்டுக் கொள்ளும் போது பாபாவிற்கு பாவம் சேருமா என்ன? நான் சாட்சியாக இருந்து பார்க்கின்றேன். அனைவரும் சண்டையிட்டு மடியப் போகிறவர்கள், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். யாராவது பெரிய மனிதர் இறந்து விட்டார் என்றால் 8-10 நாட்கள் அவருக்காக கொஞ்சம் சில சிறப்பு நிகழ்ச்சிகள் நடக்கின்றன. விடுமுறை போன்றவை அறிவிக்கப்படுகின்றன. உங்களுக்கோ எதுவுமே இல்லை. நீங்கள் பரிஸ்தாக்களாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு வினாசத்தின் துக்கம் கூட ஏற்படுவதில்லை. இப்போது கொசுக் போல் இறப்பார்கள், பிறகு யார் யாரைப் பார்ப்பார்கள்? இந்த இரகசியத்தை குழந்தை களாகிய நீங்கள் தான் தெரிந்துள்ளீர்கள்.

புதிய உலகத்தில் வசிக்கக் கூடியவர்கள் மிகவும் முதல்தரமானவர்களாக வேண்டும். இங்கே யாராவது இறந்தால் உங்களுக்கு துக்கம் ஏற்படுமா என்ன? இங்கேயோ நீங்கள் சாட்சியாக இருந்து பார்க்கிறீர்கள்-- இவர் சென்று தன்னுடைய நடிப்பை நடிப்பதற்காக வேறொரு சரீரத்தை எடுத்திருக்கிறார். உங்களில் கூட அனைவரும் நிச்சய புத்தியுடையவர்களாக இல்லை. குடும்ப

விவகாரங்களில் இருந்து கொண்டே உள்ளங்கால் முதல் உச்சி வரை இப்போது குஷியின் அளவு அதிகரித்துக் கொண்டிருக்கிறது, இருந்தாலும் சிலருக்கு குறைவாகவும், சிலருக்கு அதிகமாகவும் இருக்கிறது. சிலருக்கு மாவில் உப்பு போல! ஒரு பைசா அளவிற்குக் கூட அதிகரிப் பதில்லை. அவர்களை பயனற்றவர்கள் என்று தான் சொல்ல முடியும்.. யாருக்கு நாராயண போதை ஏறுகிறது, என்பது தெரிகிறது. தாய்-தந்தையரின் சேவை செய்கிறார்கள். குடும்ப விவகாரங்களில் இருந்து கொண்டு சேவை செய்ய முடியாது என்பது கிடையாது. அவர்கள் தான் இன்னும் அதிகம் சேவை செய்வார்கள், அதிகம் தாய்-தந்தையரின் பெயர் விளங்கச் செய்கிறார்கள். குடும்ப விவகாரங்களில் இருந்து கொண்டு தாமரை மலருக்குச் சமமாக ஆடாதவர்-அசையாதவராக ஆகி பிறகு மற்றவர்களையும் கூட அப்படி ஆக்குகிறார்கள். ஆகவே அவர்களுடைய மகிமைகள் தான் அதிகமாகும். நீங்களோ ஆரம்பத்தில் வந்தவர்கள். அது கூட நாடகமாகும். பட்டி உருவாகி இருந்தது. அதிலிருந்தும் கூட சில வேகாத செங்கற்கள் வந்தன, சில வெந்தவைகளும் வந்தன. ஐ.சி.எஸ் பரிட்சையில் அனைவரும் தேர்ச்சி பெறுகிறார்களா என்ன, ஏனென்றால் அரசாங்கம் நிறைய ஊதியம் கொடுக்க வேண்டியுள்ளது. இங்கேயும் கூட அப்படி இருக்கிறார்கள். மிகுந்த செல்வம் கொடுக்க வேண்டியுள்ளது. முக்கியமான 8 பேர் தேர்ச்சியடைகிறார்கள். பிறகு 108 மணிகளின் மாலை உருவாகிறது. முயற்சி செய்து உயர்ந்த பதவியை அடைய வேண்டும். ஃபர்ஸ்ட் கிளாஸ் ஏர்கண்டிஷன் என்று முன்பதிவு செய்யப்படுகிறது அல்லவா? ஏர்கண்டிஷனில் ஒருபோதும் சூடான காற்று வீசாது. உங்களுக்கு இந்த உலகத்தின் எந்தவொரு சூடான காற்றும் அதாவது மாயையின் சண்டை ஏற்படக் கூடாது. அந்தளவிற்கு உறுதியாக ஆக வேண்டும். 8 பேர்களோ முற்றிலும் முதல் தரமானவர்கள், பிறகு 108 ஆகும். மகாரதி, குதிரைப்படை, காலாட்படை, என்று பெயர்களும் இருக்கிறது. நாம் எந்த டிக்கெட்டை வாங்கிக் கொண்டிருக் கிறோம், என்று ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள முடியும். ஒவ்வொருவரும் டிக்கெட் வாங்க வேண்டும். கணவன் தன்னுடைய டிக்கெட்டையும் மனைவி தன்னுடைய டிக்கெட்டையும் வாங்க வேண்டும். மனைவிமார்களுக்கு அதிக வாய்ப்புகள் இருக்கிறது, ஏனென்றால் கணவன் என்ன செய்கிறாரோ அதனுடைய பாதி கணக்கு மனைவிக்கு கிடைத்து விடுகிறது. மனைவி என்ன வியாபாரம் செய்கிறாரோ, அவர் எதைக் கொடுத்தாலும் அதனுடைய கணக்கு கணவருக்குக் கிடைப்பதில்லை, ஏனென்றால் கணவர் படைப்பவர் ஆவார். பணம் அவருடைய கைகளில் இருக்கிறது. அவர் என்ன செய்வாரோ அதனுடைய கணக்கு மனைவிக்கு கிடைத்து விடுகிறது. சொர்க்கத்தில் இருவருமே எஜமானர்களாக இருக்கிறார்கள். ஒரு குழந்தை இருக்கிறது, ஆஸ்தி கூட அந்த குழந்தை தான் அடைகிறது. கன்னியர்கள் கூட தங்களுடைய கணக்கை சட்டப்படி எடுத்துக் கொள்கிறார்கள். கல்பத்திற்கு முன்னால் என்ன சட்டம் இருந்ததோ அது தான் நடக்கும். அங்குள்ள நடைமுறைகளைப் பற்றி சிந்தனை செய்யக் கூடாது. எப்படி இராஜ்யம் மாற்றமடை கிறது, என்று பாபா நிறைய காட்சிகள் செய்வித்து விட்டார். இங்கே மாறும் போது பிராமணர்கள், குருமார்கள் போன்றோர் அழைக்கப்படுகின்றனர். முன்பிருந்த நடைமுறை வழக்கம் மிக நன்றாக இருந்தது. வானப்பிரஸ்தம் அடையும் போது குழந்தைகளை மிகுந்த அன்போடு, இனி இராஜ்ய காரியங்களை நீ பார்த்துக் கொள், என்று இராஜ்ய கதியில் (சிம்மாசனம்) அமர வைத்தார்கள். இப்போதோ முற்றிலும் வயதானவர்களாக ஆகிவிடுகிறார்கள், இருந்தாலும் விடுவதில்லை. முன் பெல்லாம் குழந்தைகள்

தாய்-மீது அன்பர்களாக இருந்தார்கள். இப்போதோ தாய்க்குத் துரோகம் செய்பவர்களாகி விடுகிறார்கள். தாயின் தலைமுடியைப் பிடித்து வெளியே தள்ளி விடுகிறார்கள். இதைத் தான் இருள், தாய்-துரோகம் என்று சொல்லப் படுகிறது. சத்யுகத்தில் இது போன்ற விஷயங்கள் நடப்பதில்லை. உங்களுக்கு மிகுந்த குஷி இருக்க வேண்டும். உங்களுக்கு குழுவின் உணர்வு இங்கே வரும்.. இந்த ஞானக்கடல் எங்கு இருக்கின்றாரோ, அங்கே சங்கமம் (சந்திப்பு) இருக்கும். நதிகளின் சங்கமம் நிகழ்கிறது அல்லவா? நதிகளாகிய நீங்கள் தங்களுக்குள் சந்தித்துக் கொண்டு தான் இருக்கின்றீர்கள். இது ஞானக் கடல் மற்றும் நதிகளின் சந்திப்பாகும்.. இவர் ஜகதம்பா சரஸ்வதி யாவார், அவருடைய பெயரும் புகழ்பெற்றதாகும். மம்மாவிடம் கூட சந்திப்பதற்கு எவ்வளவு பேர் வந்தார்கள், ஏனென்றால் அவருடைய முரளி மிகவும் நன்றாகக் கவர்ந்து ஈர்க்கிறது என்பதை குழந்தைகளும் உணர்ந்தார்கள்.

இது கடல் மற்றும் நதிகளின் கூட்டமாகும். நிறைய குழந்தைகள் வந்து விடுகிறார்கள். முதலில் கடல், பிறகு நதிகள், சிறிய நதிகள் அல்லது பெரிய கால்வாய்கள் போன்றவைகள் இருக்கின்றன அல்லவா? நாம் சிறிய நதியா? அல்லது பெரிய நதியா? என்று ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள முடியும். பெரிய-பெரிய நதிகளை, வந்து சொற்பொழிவாற்றுமாறு அழைக்கிறார்கள். என்றால் அவர்கள் கண்டிப்பாக கூர்மையானவர்களே ஆவர். சிவபாபாவிடமிருந்து கிடைத்த பொக்கிஷங் களை வந்து கொடுங்கள், என்று மம்மாவை எவ்வளவு பேர் அழைத்தார்கள். குழந்தைகளாகிய நீங்கள் சென்று ஞான- ரத்தினங்களினை தானம் செய்கிறீர்கள். ஞானத்தின் ஒவ்வொரு விஷயங் களும் லட்சக்கணக்கான ரூபாய்க்குச் சமமானதாகும். சாஸ்திரங்களில் எந்தவொரு ஞானத்தின் விஷயங்களும் இல்லை. ஒருவேளை இருந்திருந்தால் பாரதம் மிகவும் செல்வந்த நாடாக இருக்கும். உங்களுக்கோ ரத்தினம் கிடைக்கின்றது, இதன் மூலம் நீங்கள் 21 பிறவிகளுக்கு செல்வந்தர்களாக ஆகின்றீர்கள். இப்போது சங்கமயுகத்தில் நீங்கள் அனைவரையும் விட உயர்ந்த வர்களாக இருக்கின்றீர்கள். பிறகு சத்யுகம்-திரேதாவில் உங்களுடைய டிகிரி குறைந்து விடுகிறது. இப்போது நீங்கள் ஈஸ்வரிய தர்பாரில் அமர்ந்துள்ளீர்கள். பாபா 21 பிறவிகளுக்கு ஆஸ்தி கொடுக்கக் கூடியவர், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். அவரைத் தான் அனைவரும் நினைவு செய்கிறார்கள். மற்றவர்கள் அனைவரும் துக்கம் தரக் கூடியவர்களாவர். துக்கம் தரக் கூடிய பொருட்கள் எப்போதும் மறக்கப்படுகிறது. ஹே பாபா, எங்களுடையவர் நீங்கள் தான், வேறு யாரும் இல்லை. ஆனால் கிருஷ்ணருடைய பெயரைக் கேட்டார்கள் என்றால், அவரைத் தான் நினைவு செய்கிறார்கள்.நீங்கள் கிருஷ்ணருடைய இராஜ்யத்தில் இருந்தீர்கள். பாபா இந்த கம்சபுரியை கிருஷ்ணபுரியாக மாற்றி விடுகிறார். அசுரபுரியிலிருந்து தெய்வீகபுரியாக மாறிவிடுகிறது. அசுரர் களுக்கும் தேவதைகளுக்கும் சண்டை ஏற்பட்டது, தேவதைகளுக்கு வெற்றி ஏற்பட்டது, என்று காட்டியிருக்கிறார்கள். தேவதைகள் சொர்க்கத்தில் இருக்கிறார்கள். உண்மையில் உங்களுடைய சண்டை 5 விகாரங்களோடு ஆகும். இப்போது இராமாயணத்தின் ஈடுபாடு அதிகரிக்கும், ஏனென்றால் தசரா வருகிறது. அரசாங்கமும் கொண்டாடுகிறது. ராமலீலை செய்கிறார்கள், ஆனால் இராவணன் என்ன பொருள் என்பதைத் தெரிந்திருக்கவில்லை.

நிஷ்டையில் அமர வையுங்கள், என்று நிறைய குழந்தைகள் சொல்கிறார்கள்.

உண்மையில் நடக்கும் போது சுற்றும்போது நினைவு செய்ய வேண்டும்.. ஆனால் முழு நாளிலும் யார் நினைவு செய்வதில்லையோ அவர்களை, இங்கே அமர வைப்பதின் மூலம் ஏதாவது கொஞ்சம் நினைவு செய்வார்கள், என்று அமர வைக்கப்படுகிறது. நிறைய பேர்கள் சென்டருக்கு வரும்போது நினைவு செய்கிறார்கள், வீட்டிற்கு சென்றார்கள் என்றால் முடிந்தது.. நினைவு செய்வதற்கான பயிற்சி இல்லை. புத்தி வேறு-வேறு பக்கம் அலைந்து கொண்டே இருக்கிறது. ஆத்மா நட்சத்திரம் போன்று இருக்கிறது, அதனை புள்ளி என்றும் சொல்லப்படுகிறது என்பது குழந்தைகளுக்குப் புரிய வைக்கப்பட்டிருக்கிறது. நட்சத்திரத்திலோ மூலைகள் இருக்கின்றது. புள்ளியில் இருப்பதில்லை. ஒப்பிடப்படுவதால் நட்சத்திரம், என்று சொல்லப்படுகிறது, அதிர்ஷ்ட நட்சத்திரம், என்று சொல்லப் படுகிறது. புள்ளி ரூபமான ஆத்மாவில் ஞானத்தின் பிரகாசம் இருக்கிறது. புள்ளியான ஆத்மாவில் அனைத்து நடிப்பும் இருக்கிறது. புள்ளியான என்னிடத்தில் இந்த-இந்த நடிப்பு இருக்கிறது, அதை பக்தியிலிருந்து நடித்து வந்திருக்கிறேன், என்று பாபா கூறுகின்றார். குழந்தைகளாகிய உங்களுக்குத் தான் அதிக நடிப்பு இருக்கிறது, ஏனென்றால் நீங்கள் சக்கரத்தை முழுமையாகச் சுற்றுகிறீர்கள். ஆகவே சக்கரவர்த்தி இராஜாவாகவும் நீங்கள் தான் ஆவீர்கள். துக்கமோ, சுகமோ நீங்கள் தான் அடைகின்றீர்கள். உங்களுடைய அளவிற்கு என்னுடைய நடிப்பு இல்லை. நான் வானப் பிரஸ்தத்தில் சென்று விடுகின்றேன். பிறகு பக்தி மார்க்கத்தில் என்னுடைய நடிப்பு ஆரம்பமாகிறது. நினைவும் செய்கிறார்கள். நாடகத்தின் படி எந்தெந்த தேவதைகளின் பூஜை செய்கிறார்கள், இருந்தாலும் காட்சிகளை நான் தான் செய்விக்கின்றேன். நாடகத்தில் இது என்னுடைய நடிப்பாகும். நமக்கு இவர்கள் மூலம் காட்சிகள் ஏற்படுகிறது, என்று அவர்கள் புரிந்து கொள்கிறார் கள். இவரிடத்திலும் கூட பகவான் இருக்கின்றார். கணேசன் மூலம் காட்சி ஏற்பட்டது என்றால், கணேசனிடமும் பரமாத்மா இருக்கின்றார், என்று புரிந்து கொள்கிறார்கள். இதன் மூலம் தான் சர்வவியாபி என்ற ஞானத்தை எடுத்துக் கொண்டார்கள். மேலும், நாங்கள் அனைவரும் பாபாவை நினைவு செய்கிறோம் அதாவது, அனைத்திலும் பாபாவின் நினைவு இருக்கிறது, என்று குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும் கூறுகின்றீர்கள். ஆக இதன் மூலமும் சர்வவியாபி, என்று புரிந்து கொள்கிறார்கள். என்னுடைய நினைவில் கூட அனைவரும் வரிசைக்கிரமமான முயற்சி யின் அனுசாரமாகத் தான் இருக்கிறார்கள் என்று பாபா கூறுகின்றார். யார் எந்தளவு நினைவு செய்கிறார்களோ, அந்தளவு விகர்மங்கள் (பாவ கர்மங்கள்) அழியும். மற்றபடி ஆத்மாவானது ஒவ்வொருவருக்குள்ளும் அவரவருடையது வியாபித் திருக்கிறது (பரவியுள்ளது). நான் எந்த குழந்தைக்குள்ளும் பிரவேசித்து யாருக்கு வேண்டுமானாலும் நன்மை செய்ய முடியும். ஆனால் பிறகு அவர்கள் தலைகீழான அர்த்தமுடையதாக்கி விட்டார்கள். அதுவும் நாடகத்தில் அடங்கி யுள்ளது. நாடகத்தின் படி அனைவருக்கும் நடிப்பு கிடைத்துள்ளது. இந்த சாஸ்திரம் போன்றவை கள் உருவாக்குவதற்கான நடிப்பும் நாடத்தில் இருக்கிறது. யார் முன்னால் உருவாக்கியிருந்தார் களோ, அவர்கள் தான் உருவாக்குவார்கள். கீதை சொல்கிறார்கள் என்றால் கல்பத்திற்குப் பிறகு அப்படியே சொல்வார்கள். ஆக குழந்தைகளின் கூட்டத்தில் பாபா அமர்ந்திருக்கிறார். யார் என்னைத் தெரிந்திருக்கிறார்களோ அவர்களுக்கிடையில் தான் நான் ஒளியாக இருக்கிறேன். மற்றபடி யார் என்னைத் தெரிந்திருக்கவில்லையோ அந்த கூட்டத்தில் நான் அமர்ந்து கொண்டு என்ன செய்வேன்? நீங்கள் சொற்பொழிவு

போன்றவைகள் செய்யும்பொழுது நிறைய பேர் வருகிறார்கள். அவர்களுடையதை விளக்கோடு (ஒளியுடன்) இருக்கும் கூட்டம், என்று சொல்ல முடியாது. விளக்கோடு (பாபா) இருக்கும் கூட்டம் (குழந்தைகள்-ஆத்மாக்கள்) இங்கே தான் இருக்கிறது. சிலர் பலியாகிறார்கள், பிறகு வேறு பக்கம் புத்தியின் தொடர்பு சென்று விடுகிறது. சம்பூரணம் ஆகும்வரை புத்தி சென்று கொண்டிருக்கிறது. கர்மாதீத் நிலை, சம்பூரண நிர்விகாரி நிலை, என்று இப்போது சொல்ல முடியாது. அது கடைசியில் ஏற்படும். பிறகு இந்த பழைய சரீரம் விடுபட்டு விடும். இது பழைய சரீரம் (தோல்). ஆத்மா இந்த பழைய கர்மேந்திரியங்களின் மூலம் வேலை வாங்குகிறது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும்-தந்தையுமான பாப்-தாதாவின் அன்பு-நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) சிவபாபாவின் மூலம் கிடைத்திருக்கக் கூடிய பொக்கிஷத்தை அனைவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். அழிவற்ற ஞான ரத்தினங்களின் தானம் செய்து 21 பிறவிகளுக்கு செல்வந்தர்களாக ஆக வேண்டும்.

(2) தன்னுடைய மன நிலையை ஆடாததாகவும்-அசையாததாகவும் மாற்ற வேண்டும். குடும்ப விவகாரங்களில் இருந்து கொண்டே கூட தாமரை மலருக்குச் சமமாக ஆகி பாபாவின் பெயரை விளங்கச் செய்ய வேண்டும். சேவையில் ஈடுபட்டவர்களாக இருக்க வேண்டும்.

வரதானம் : சங்கமயுகம் என்ற இந்தப் புதிய யுகத்தில் ஒவ்வொரு நொடியும் புதுமையின் அனுபவம் செய்யக்கூடிய தீவிர புருஷார்த்தி ஆகுக.

சங்கமயுகத்தில் அனைத்தும் புதியனவாக ஆகி விடுகின்றன. அதனால் அதைப் புது யுகம் எனவும் சொல்கின்றனர். இங்கே எழுவதும் புதிது, பேசுவதும் புதிது, நடப்பதும் புதிது. புதியது என்றால் அலௌகிகமானது. ஸ்மிருதியில் புதுமை வந்து விட்டது. பேசும் வார்த்தைகளும் புதியன, சந்திப்பும் புதியது, பார்ப்பதும் புதியது. பார்ப்பது ஆத்மாவைத் தான். ஆத்மாவையே பார்ப்பீர்கள், சரீரத்தை அன்று. சகோதர-சகோதரன் என்ற திருஷ்டி மூலம் தொடர்பில் வருவீர்கள், தேக சம்பந்தத்தில் இல்லை. அது போல் ஒவ்வொரு நொடியும் தனக்குள் புதுமையை அனுபவம் செய்வது - அது - ஒரு நொடிக்கு முன்பு இருந்த அவஸ்தாவும் கூட அடுத்த நொடியில் இருக்காது. அதைக் காட்டிலும் முன்னேற்றத்தில் இருக்க வேண்டும். இது தான் தீவிர (அதிவேக) புருஷார்த்தம் எனப்படும்.

சுலோகன்: பரமாத்ம அன்பின் மூலம் வாழ்க்கையில் சதா அதிந்திரிய சுகம் மற்றும் ஆனந்தத்தின் அனுபூதி அடைவது தான் சகஜயோகம் ஆகும்.